# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நவக்கிரி எல்லாவல் சன சமூகநிலையத்திற்கு அருகாமையில் கிணற்றுடன் 11 பரப்பு தோட்டக்காணியும், நவக்கிரி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் (மின்சார வசதியுண்டு.) 15 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. தங்கம்மா, நவக்கிரி, புத்தூர். 7341

பருத்தித்துறை வீதிச்சந்தியிருந்து கல்வியங்காடு புதுச்செம்மணி ரோட்டில் 150 யாருக்குள் சதுரமான நாலு பரப்புக் காணி வீடுகள் கட்டவும் விரும்பினால் தோட்டச் செய்கைக்கும் வசதியாக தென்னை, பனை, விளாத்தி மரங்களோடு விற்பனைக்கிருக்கிறது. யாழ்ப்பாணம், 28/1, யாழ். வீதி, நா க. பொன்னுத்துரையோடு தொடர்பு கொள்ளவும். 7336

சாவகச்சேரி புகையிரதவீதியில் 4 பரப்புக்காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு: P. B. கிங்ஸ்லி, No. 13, 4ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். 7344

உரும்பராய் கிழக்கு இவன் வீதியில் 3½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந மகேந்திரன், 'லட்சுமி வாசா', இவன் வீதி, உரும்பராய். 7348

கோண்டாவில் வடக்கு சிவபூதராயர் கோவிலுக்கண்மையில் அன்னுங்கையில் மூன்று காணித்துண்டுகள். சிறுமண் வீடுகளுடன் அடுத்தடுத்துள்ளவை. முறையே 1பரப்பு 7 குழி, 1 பரப்பு, 1 பரப்பு 3 குழி. தனித்தனி உறுதிகள் உண்டு. கோவில் கிணற்றில் தண்ணீர் பங்குண்டு இறுபகுமைத் தமிழ்மக்களுக்கு முதலிடம்தரப்படும். விபரங்களுக்கு: சி.ச முருகேசபிள்ளை, பண்ணைவடி விநாயகராலயவீதி, பருத்தித்துறை அல்லது அறவழிப் போராட்டக்குழு, வேம்கினிமா வீதி, சாவகச்சேரி. 7350

HONDA—MB 8 மோட்டோர்சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை நேரில் பார்வையிடலாம். சி. பத்மநாதன், 124, பருத்தித்துறை வீதி. (ஆனைப்பந்தி உபதபாற்கந்தோருக்கு பக்கத்தில்) ஆனைப்பந்தி. (7332)

## தவறிவிட்டது

17-5-83, பகல் 2 மணியளவில் யாழ். பஸ் நிலைய-நவீன சந்தை சோதி ரெக்ஸ்ரைலுக்கிடையில் சிவப்புநிற லேடீஸ் பேஸ் உடன் எனது அடையாள அட்டை (No 4879/4424 v) தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவு செய்து யாழ்.சோதி ரெக்ஸ்ரைலில் முதலாளியிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 7335

## பயிற்சி

டெலிவிசன் அன்றனா (Antanna) தயாரித்தலும்- இணைத்தலும்- பயிற்சி வகுப்பு பிரபல நிறுவனத்தில் ஆரம்பமாகின்றது கட்டணம் 275/- மட்டும் பயிற்சிக்காலம் ஒரு மாதம்-எவரும் சேரலாம். 30-5 83 முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7349, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7349

---

உ
சிவமயம்

## திருமண நன்றிநவிலல்

எமது திருமண வைபவத்தில் சமுகமளித்து எம்மை ஆசீர்வதித்து அன்பளிப்புகள் வழங்கிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. க. மு. தர்மராஜா, (பிரசித்த நொத்தாரிசு)
திருமதி தி. தர்மராஜா, யாழ்ப்பாணம். (7351)

---

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்: 16-12-1901



மறைவு: 26-04-83

### பண்டிதர் இ. இராமலிங்கம்

26-04-83 சித்திரா பூரணையில் சிவபதமடைந்த மாதகல் பிரசித்த நொத்தாரிசு பண்டிதர் இ. இராமலிங்கம் அவர்களின் அந்தியேட்டி கிரியை எதிர்வரும் வியாழக்கிழமை 26-05-83) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மாதகல் கிழக்கு, மாதகல். 7347

---

## வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

BAHARINஇல் கீழே குறிக்கப்பட்ட வேலைகளுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்

1. ஜெனரல் வேக்ஷொப்/சைற் சுப்ரின்ரன்ரன் (GENERAL WORK SHOP/SITE SUPERINTENDENT)
2. ஏ/சி டிசைன்/எஸ்ரிமேற்றிங் எஞ்சினியர் (A/C DESIGN/ESTIMATING ENGINEERS)
3. எலெக்ரிக்கல் டிசைன்/எஸ்ரிமேற்றிங் எஞ்சினியர் (ELECT-DESIGN/ESTIMATING ENGINEERS)
4. பிளமிங் டிசைன்/எஸ்ரிமேற்றிங் எஞ்சினியர் (PLUMBING-DESIGN/EST ENGINEERS)
5. பில்டிங் சேவிஸஸ் டிராஸ்மென் (BUILDING SERVICES DRAUGHTSMEN)
6. ஏ/சி மெயின்ரனன் போமன் A/C MAINTENANCE FOREMEN)
7. எலெக்ரீஷியன் (ELECTRICIANS)
8. பிளமேர்ஸ் (PLUMBERS)
9. ஏ/சி மெக்கானிக் (A/C MECHANICS)

### சலுகைகள்

1. இலவச உணவும் இருப்பிட வசதியும்
2. இலவச வைத்திய உதவியும் காப்புறுதியும்

25-ந் திகதி புதன்கிழமை
காலை 9-00 மணி தொடங்கி 3-00 மணிக்குள்
கடவுச்சீட்டுடனும் போட்டோப்பிரதி
நிழற்படங்கள் ஆறுடனும்
7 வருட அனுபவ சான்றிதழின் அசல்பிரதியுடனும்
நேரில் சமுகம் தரவும்.

**மித்ரா என்டப்பிரைசஸ்,**
ஆஸ்பத்திரி வீதி, தெல்லிப்பழை.

தொழில் அனுமதி பத்திர இல: 257
தொழில் அங்கீகார இல: J/FE 83 (Mise)
(7340)

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் ஆசைப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

மலர்வு: 20-06-1911 உதிர்வு: 26-04-1983

26-04-1983இல் இறைவனடி சேர்ந்த ஒட்டுசுட்டான் முன்னாள் பிரபல வர்த்தகரும் எமது அன்புத் தெய்வமாகிய அமரர் ஆசைப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்கள், அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவி வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை
நாளை (26-5-83)
காரைநகர் ஆலங்கண்டு வைரவர் ஆலயத்தில்
நடைபெறும்.

சபீண்டிகரணக்கிரியைகள்
நாளை பகல் அன்னாரின் சிவன்கோவிலடி இல்லத்தில்
நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்;

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்.

சிவன் கோவிலடி, காரைநகர். (7345)

---



**வெளிநாடு செல்கிறீர்களா?**

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.


விபரங்கட்கு:-
TFC
**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680
COLOMbo Studio

---

சென்னை-ரூபவாகினி
நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டு களிக்க தொலைக்காட்சி ஏரியல் அமைப்பதற்கு...

**வீனஸ் நியூவீனஸ்**

ரீ.வீ., ரேடியோ உத்தரவாதத்துடன் மணிக்கூடுகளை பழுதுபார்த்துக் கொள்ளவும்



புதிய ரீ.வி, ரேடியோ, மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

விரும்பிய பாடல்களை பதிவு செய்துகொள்ளவும்

மற்றும் மங்களவைபவங்களை வீடியோவில் படம்பிடித்துக் கொள்ளவும்

மேலும் யாழ்.நகரில் உத்தரவாதத்துடன் ரீ.வீ ஏரியல் பொருத்திக்கொள்ள

**வீனஸ்** 266/1, ஸ்ரான்லி வீதி ஸ்ரீதர் தியேட்டர் அருகில் யாழ்ப்பாணம்

**நியூ வீனஸ்** 79/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# மொசாம்பிக் மீது தென்னுபிரிக்க யுத்த விமானங்கள் தாக்குதல்!

## 5 பேர் பலி! 24 பேர் காயம்!

லண்டன், மே 24

தென்னுபிரிக்காவின் யுத்த விமானங்கள் மொசாம்பிக்கின் தலைநகரம் அமைந்துள்ள பகுதியைத் தாக்கியுள்ளன. மொசாம்பிக்கில் குடிமக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசங்களிலேயே இத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

பிறிட்ஜ் ரவுனில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றையடுத்தே இத்தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின்போது 5 பேர் பலியானுர்கள். 24 பேர் காயமடைந்தனர். மொசாம்பிக் அதிகாரிகள் இத்தாக்குதல் சம்பவம் குறித்துக் கருத்தெதுவும் வெளியிடவில்லை.

தென்னுபிரிக்காவின் இத்தகைய வன்முறைச் சம்பவங்களினுல் அப்பாவி மக்கள் உயிரிழந்துவருவது குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. பிரெய்ஸ்டி கொயிலர் கவலை தெரிவித்துள்ளார்.

தென்னுபிரிக்கா – மொசாம்பிக் பிரச்னைக்கு அமைதித் தீர்வொன்று காணப்படவேண்டுமென்று அவர் உலகநாடுகளைக் கேட்டுள்ளார். [வெ]

### இந்தியா கண்டனம்

புதுடில்லி, மே 24

தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் ஆட்சிக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருவதை இந்தியா கண்டித்துள்ளது.

இன ஒதுக்கல் மனிதகுலத்திற்கு எதிரான தொகு நடவடிக்கையாகுமென்றுஇந்தியா தெரிவித்துள்ளது. [வெ]

விடுதலே போராளிகள் நினைவுவாரம்:

## வடக்கு, கிழக்கில் கொண்டாட ஏற்பாடு!

(மட்டக்களப்பு)

வடக்குகிழக்கு மாகாணங்களில் ஜூன் 1ம் திகதியிலிருந்து 7ந் திகதிவரை விடுதலைப்போராளிகள் நினைவு வாரமாக அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை தமிழர் விடுதலைக் கழகம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி இவ்வாரத்தில் கொடியிறப்பனே, கருத்தரங்குகள் பவும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தியாகி சிவகுமாரன் நினைவு தினமான ஜூன் 5-ம் திகதி மட்டக்களப்பில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு தமிழீழ விடுதலைக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் திரு. இரா. வாசுதேவா தலைமைதாங்குவார். (ச)

## லெபனுன் பிரச்னைக்கு தீர்வுகாண நடவடிக்கை

பெய்ரூட், மே. 24

லெபனுன் பிரச்னைக்குத் தீர்வுகாணுமுகமாக அமெரிக்காவும், அரபிய நாடுகளும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக லெபனுன் வெளிநாட்டமைச்சர் ஜரூப்சலீம் நிருபர்களிடம் தெரிவித்தார்.

லெபனுன் இஸ்ரேலுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு சர்வதேச ஆதரவு தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

லெபனுன் வெளிநாட்டமைச்சர் உலகநாடுகளுக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியுள்ளார். [வெ]

## லெபனுனிலிருந்து .சிரியாவின் படைகளை வாபஸ்பெற கோரிக்கை

பெய்ரூட், மே. 24

லெபனுனிலிருந்து இஸ்ரேலியர் படைகளுடன் சேர்ந்து சிரியாவும் தனது படைகளை விலக்கிக்கொள்ளவேண்டுமென்று மத்தியகிழக்கிற்கான அமெரிக்காவின் விசேட தூதுவர் திரு. பிலிப்ஹபீப் சிரியாவைக் கேட்டுள்ளார்,

இது தொடர்பாக திரு. பிலிப்ஹபீப் இன்று பெய்ரூட்டில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். [வெ]

## பிரதமர் இந்திரா இன்று சென்னை விஜயம்

[சென்னை]

காவிரிநீர்ப் பங்கீட்டிற்கான தெலுங்கு - கங்கைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்றுசென்னை வருகிறுர்.

திருமதி இந்திராகாந்தி தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் கட்சியின் மாநில கூட்டத்திலும் உரையாற்றவுள்ளார்.

தமிழ்நாடுமுதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் கோரிக்கையை ஏற்றே திருமதி இந்திராகாந்தி தெலுங்கு-கங்கைத்திட்டத்தை ஆரம்பித்துவைக்குமுகமாக சென்னை வருகிறுர். [வெ]

மகஜர்

[கரவெட்டி]

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக்கூட்டுறவுச்சங்க ஊழியர் சம்மேளனம் சங்க இயக்குனர் சபையினரிடம் 16 கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இக்கோரிக்கைகள் பற்றி இயக்குனர்சபையில் விரைவில் ஆராயப்படவுள்ளது.

வல்வெட்டித்துறையில்

## ரூ. 30 லட்சம் செலவில் நகரசபைக் கட்டடம்

(கரவெட்டி)

சுமார் 30 லட்சம் ரூபா செலவில் வல்வையில் ஒருங்கிணைந்த நகரசபைக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்காகக் காணி வாங்குவதற்கென 2லட்சம் ரூபாவை வல்வை நகரசபைக்கு அரசு வழங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை ஆலடி வீதியில் அமைக்கப்படவுள்ள இக்கட்டிட நிர்மாணவேலையில், கீழே நகரசபை மண்டபமும் மேலே அலுவலகமும் கொண்ட மாடிக்கட்டிடமும், அருகே பொதுசன நூல் நிலையக் கட்டிடமும் அமைக்கப்படும்.

வல்வை நகரசபை நிலம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

## 'தனிமனிதன் திருந்தினுல் சமுதாயம் சீராக அமையும்'

(திருகோணமலை)

தனிமனிதன் சீர்திருந்தினுல் சமுதாயமும சீராக அமையும். மனித உள்ளத்தில் இருந்து மத' இன, மொழி வேறுபாடுகளைக் களைந்தால் சர்வதேச ரீதியில் தேசிய ஒருமைப்பாடும் சமாதானமும் நிலவும்

தேசிய ஒருமைப்பாடு சமாதானத்துக்கான ரோட்டரிக் குழு திருகோணமலையில் நடாத்திய கருத்தரங்கில் தலைமை தாங்கிய ரோட்டரிக் கழகத் தலைவர் டாக்டர் டி. கே. இராஜசூரியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருகோணமலை சென். மேரிஸ் கல்லூரி மாணவிகளின் குழு தேசிய ஒருமைப்பாட்டினை மையமாகக் கொண்ட ஆங்கிலப்பாடல்களை பாடினுர்கள். கொழும்பு மத்திய தொகுதியைச் சேர்ந்த முன்னுள் ரோட்டரிக் கழகத் தலைவர் திரு. ஏ.ஏ. பெரேரா நாட்டில் சில இடங்களில் வன்செயல்கள் நிகழ்ந்த காரணத்தால் ரோட்டரிக்கழகம் தேசிய ஒருமைப்பாடு, சமாதானக் குழுவை அமைத்தது என்றும் இளைஞர்களின் உள்ளங்களில் ஒருமைப்பாட்டுக் கருத்துக்களைப் பரப்பும் நோக்குடன் இக்குழு இயங்கத்தொடங்கியுள்ளது என்றும் விளக்கினர்.

[7-ம் பக்கம் பார்க்க]

இரத்தினக்கல் கடத்த முயன்ற

## தாய்லாந்து பிரஜைகளுக்கு ரூ. 5 லட்சம் அபராதம்!

### மீன்பிடிப்படகு, கார் பறிமுதல்!

[திருகோணமலை]

திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து 'கஜீடா' இரத்தினக்கற்களையும், போதைவஸ்துக்களையும் கடத்திச் செல்லமுற்பட்ட மூன்று தாய்லாந்து பிரஜைகளுக்கு 5 லட்சம் ரூபா அபராதம் சுங்க அதிகாரிகளால் விதிக்கப்பட்டது.

இவர்களின் 25 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி இழுவைப்படகையும் பறிமுதல் செய்யும்படியும் சுங்க அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இரத்தினக்கற்களையும், கஞ்சாவையும் எடுத்துச் செல்லப் பாவிக்கப்பட்ட காரும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது இரத்தினக்கற்களும் பறிமுதல் செய்யப்பட்டது. (வெ)

### 'ரோகினி' செயற்கைகோள் கமராஇயங்கியது

புதுடில்லி, மே. 24

கடந்தமாதம் 17-ம் திகதி சிரெஹரி கோட்டாவிலிருந்து விண்வெளிக்குச் செலுத்தப்பட்ட இந்தியாவின் 'ரோகினி' செயற்கைகோளில் பொருத்தப்பட்ட கமரா மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளது

இதில் பொருத்தப்பட்ட கமரா கடந்த சில தினங்களாக இயங்காமலிருந்து வந்தது தெரிந்ததே. (வெ)

## கந்தர்மட அகதிகளுக்கு வவனியாவில் நிதிசேகரிப்பு

[வவனியா]

கந்தர்மட அகதிகளின் புனர்வாழ்வுக்கு உதவி வழங்குவதற்கு வவனியா பகுதியிலும் நிதி சேகரிக்கப்படுகிறது. வவனியா எம்.பி.திரு தா. சிவசிதம்பரம், வவனியா மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சிற்றம்பலம், வவனியா நகரசபைத் தலைவர் திரு. ஐ. வேதீஸ்வரன் ஆகியோர் நேற்று முதல் நகரத்திலுள்ள கடைகளில் நிதிசேகரித்தார்கள் இன்றும் நாளையும் இந்த நிதி சேகரிப்பு வேலைகள் நடைபெறும் என்றும், கந்தர்மட அகதிகளுக்கு தன்னாலான பெரும் சேவையைச்செய்து வரும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களிடமே இந்த நிதி ஒப்படைக்கப்படும்என்றும் வவனியா எம். பி. தெரிவித்தார்.

### ஆத்திசூடி ச. ச. நிலையம் உதவி

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை கந்தர்மடத்தில் இடம் பெற்ற வன்முறைச்சம்பவங்களினுல் பாதிக்கப்பட்டு, நிர்க்கதியாகியுள்ளவர்களுக்கு ஆத்திசூடி வீதி கலைமகள் சனசமூக நிலையம் இருப்பிட வசதிகளை அமைத்துக் கொடுத்தும், தொடர்ந்து மூன்று நாட்களாக உணவும் பொருட்களையும் வழங்கி உதவி செய்துள்ளது.

இச்சனசமூக நிலையத்தினர் வீடுகளை இழந்த கந்தர்மடம் மக்களுக்கு உதவும் முகமாக கொழும்புத்துறையிலும், அரி

[6ம் பக்கம் பார்க்க]

தென்னுபிரிக்கா மீது

## கட்டாயத்தடைகளைவிதிக்கவும்

### ஐ. நா. விடம் இந்திரா கோரிக்கை

புதுடில்லி, 24

'நமீபியாவிற்கு சுதந்திரம் வழங்குவதற்கு தென்னுபிரிக்கா உடன்படாவிட்டால் அதன்மீது கட்டாயத் தடைகளை ஐ நா. பாதுகாப்புச்சபை விதிக்கவேண்டும்.'

இவ்வாறு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஐ நா. பாதுகாப்புச்சபையைக் கோரியுள்ளார்.

சுமார் 17 ஆண்டுகளாக ஐ நா.வின் மேற்பார்வையிலிருந்துவரும் நமீபியா மக்களின் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வுகாணப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். [வெ]

### மணிவாக்கு

''அன்பப்பணி செய்ய என்னை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலைதானே வந்து எய்தும் பராபரமே''

— தாயுமானவர்

# நமது நோக்கு

## உழைக்கும் பத்திரிகையாளருக்கு கிழக்கு வெளிக்கிறது?

'அகப்பை பிடிப்பவன் நம்மவனாயிருந்தால் அடிப்பந்தியென்ன, நுனிப்பந்தியென்ன?'' என்பார்கள்.

ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் இந்த ஆட்சியில் பெருஞ் செல்வாக்குப்படைத்த அமைச்சராயிருக்கும்போது 'பத்திரிகைப் பையன்கள்' பயப்படத் தேவையில்லையென்று பரவலாகப் பேசப்பட்டது.

ஆட்சியின் முதலாவது அத்தியாயத்தின் அந்திய காலத்திலாவது பத்திரிகைப் பணிக்கு விடிவு கிடைக்கும்போற்றெரிகிறது.

இன்னும் சில நாட்களில் உழைக்கும் பத்திரிகையாளருக்கு ஒரு சம்பள நிர்ணய சபை அமைப்பதற்கு ஆட்சேபம் உண்டாவென்ற பகிரங்கக் கேள்வி பத்திரிகைகளில் வெளிவருமென நம்பப்படுகிறது.

திருமண அறிவித்தல் அதனைத் தொடர்ந்துவரும் திருமணப்பதிவு போன்ற சம்பிரதாயமான நடவடிக்கையே இது.

சம்பள நிர்ணய சபை ஒரு நீண்டகால நோய்க்கு ஒருகை மருந்தெனக்கொள்ளலாம். தேவைப்படும் தருணத்தில் அதனைமுறியடிக்க வல்ல ரசாயனமருந்தும் இந்நாட்டில் இல்லாமலில்லை.

என்றாலும் ''சும்மாயிருந்த நாச்சியாருக்கு இது பெரும் பரிசல்லவா?'' என்று கேட்பாரும் உளர்.

இந்த நாச்சியாரை நாம் அறிமுகப்படுத்துவதில் மிகவும் கவலை (மகிழ்ச்சியல்ல) கொள்கின்றோம்.

கடந்த காலத்தில் ஆசிரிய சேவைக்கென ஒரு நிதானமான சம்பள முறையில்லாமலிருந்ததை இன்றைய ஆசிரியர்கள் அறியமாட்டார்கள். அது (ஆசிரிய சேவை) ஓர் ஊர்வலம் போல் கணிக்கப்பட்டது. உத்தியோகமல்ல; தொழிலுமல்ல? 'Procession not Profession எனப்பட்டது; நினைத்த இடத்திற்சேர்ந்து, நினைத்த இடத்தில் விலகக் கூடிய வாய்ப்பு.

வேறு ஏது தொழிலும் அகப்படாவிட்டால் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்ந்து படிப்பித்தல் என்றொருவழக்கம்; மிகப்படித்தவர்களும், ஒன்றும் தெரியாதவர்களும் ஒருமிக்க சேர்ந்த கூட்டம்; பின்பு ஆசிரிய பயிற்சி தொடங்கிய காலம் பயிற்றப்பட்ட ஆசிரியருக்கென ஒரு நியாயமான சம்பளத் திட்டம் உருவானது. பெரும்படிப்புடைய பண்டிதர்கள், புலவர்கள் பலர் ஆசிரியப்பயிற்சி இல்லாத படியால் ஆசிரிய தராதரமற்றபடியில் (Uncertificated) மாதம் 20 ரூபா வேதனத்தில் வாழ்க்கை நடத்தினர். நம்பலாமா?

இன்று ஆசிரிய சேவை என்னென்ன உயர்ச்சிகளைக் கண்டிருக்கிறது? வருமான வரித் திணைக்களம் எத்தனை ஆசிரியர்களின் வாசற்றலங்களில் பரிசோதனை நடத்துகிறது.

அது எவ்வாறாயினும், உழைக்கும் பத்திரிகையாளர்கள் தங்கள் தொழிலில் உற்சாகம் கொள்ள இடமுண்டு; அதே சமயத்தில் தம் மதிப்புக்கேற்ற தராதர முள்ளவர்களாகத் தகைமை பெறவேண்டும்.

இந்நாட்டில் 37 சம்பள நிர்ணயசபைகள் உண்டு. கடந்த ஐந்து வருடங்களில் ஆறு சபைகள் புதிதாக அமைக்கப் பட்டிருக்கின்றன.

காவல்சேவை, ஹோட்டல்சேவை, ''பத்திக்'' தொழில், கண்ணாடித் தொழில், தோல் பதனிடும் தொழில் இவையெல்லாம் இச்சபைகளின் பாதுகாப்புப் பெற்றிருக்கின்றன.

இன்று பத்திரிகையாளருக்கு கிரகநிலை மாறுகின்றது.

பிரமனைப்போல் படைக்கவும், விஷ்ணுவைப்போல காக்கவும், உருத்திரனைப் போல் அழிக்கவும் வல்ல பத்திரிகை ஊழியர்கள் இவ்வளவு காலமும் எவ்வித பாதுகாப்புமின்றி வாழ்க்கை நடத்தினரே! என்ன அதிர்ச்சி!

பத்திரிகைத் தொழிலின் மகத்துவத்தை உணரும் ஆற்றல் அற்றவர்கள்-அதிகாரிகள், தொழில் அதிபர்கள், பொதுமக்கள் தானும் இத்தொழிலை இழிவுபடுத்தும் செயல்களில் ஈடுபடுகின்றனர். நாகரிக வாழ்வு விருத்தியடைய நீண்டகாலம் தேவைபோல் தெரிகிறது.

தொழிலுக்கேற்ற கல்வி, பயிற்சி தராதரமில்லையே என்ற குறையை பத்திரிகை முகாமைத்துவம் இன்றும் பெரிதாகக்கொள்கின்றது.

அதனை நீக்க பத்திரிகை அதிபர்கள் சங்கம் நடவடிக்கை எடுக்கின்றதா?

இன்று உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உருவாகியிருக்கின்றது.

இதற்குவேண்டிய ஆதரவும் மதிப்பும் வழங்க வல்லவரே ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்த டி அல்விஸ்.

பத்திரிகைத் தொழிலின் ரகசியம் உள்ளும் புறம்பும் நன்கறிந்தவர். அத்துறைக்கு அவர் ஆற்றிய சேவை எவருக்கும் பெரும் பக்கபலத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அவருடைய பெருந்தொடர்பினால் இன்று பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கும் இப்புனித சேவை கணிசமான அளவிற்கு உயருமென நம்பலாம்.

# தணிகைப் புராணம் பதித்தமை!

[நேற்றைய தொடர்ச்சி]

சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம்பிள்ளையவர்கள் தமிழ்நாட்டில் தமிழ்த்தொண்டுசெய்துவந்த காலத்தில், எதிலும் ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பின்நின்றே செய்துவந்தார்

தமிழிலக்கணத்தில் மிகத் தொன்மை வாய்ந்ததும் பரந்ததுமான தொல்காப்பியத்தை முற்றுகப் பதித்து வெளியிடுதலையே அவர் பெரிதும் விரும்பினர் தொல்காப்பியம் என்பது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் என முப்பிரிவுகளையுடையது,

இப் பிரிவுகளுக்கு இளம்பூரணர், கல்லாடர், தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர் முதலான பெருமக்கள் உரையெழுதிச் சிறப்பித்தார்கள் தொல்காப்பியத்தின் முதற்பகுதியாய எழுத்ததிகாரத்தை மழவை மகாலிங்கையர் என்னும் அறிவாளி முதலிற் பதித்தார்.

எனவே ஆறுமுகநாவலரவர்கள் சொல்லதிகாரம் பகுதியைச் சேனாவரையர் உரையோடு ஆராய்ந்து கொடுப்ப, சி. வை. தாமோதரம்பிள்ளை அதனை 1868ம் ஆண்டில் முதன்முதலாக வெளியிட்டார். அவர் வெளியிட்ட நூலின் முதற்பக்கத்தில் பதிப்பு விபரம் உள்ளது.

இந் நூல் முந்நூற்றைந்து பக்கமளவில் பருத்தது நூலின் இறுதியில் எட்டு பக்கங்களில் சூத்திரவகராதி வேறுபாடுமைந்து படிப்போருக்கு உறுதிசெய்கிறது.

உ
கணபதிதுணை
தொல்காப்பியம்
சொல்லதிகாரம்
—...—
இஃது
வடநூற்கடலை
நிலைகண்டுணர்ந்த
சேனாவரையருரையோடும்
நல்லூர்
ஆறுமுகநாவலரால்
பல பிரதிருபங்களைக்கொண்டு
பரிசோதித்து
யாழ்ப்பாணம்
சி. வை.
தாமோதரம்பிள்ளையால்
சென்னப்பட்டணம்
ஊ. புஸ்பரதச் செட்டியாரது
கலாரத்நாகரவச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
—......—
விபவஹு புரட்டாதி மீ
Registered Copyright

பிள்ளையவர்கள் தொல்காப்பியத்தைத் தொடர்ச்சியாக அச்சிடுவதற்கு வெகுவாக முயன்றும் சந்தர்ப்பம் சூழ்நிலைசாதகமாக அமையவில்லை எனவேதான் அவர் வீரசோழியம் என்னும் இலக்கண நூலை பெருந்தேவனார் உரையோடு

ருக்குத் தணிகைப்புராண ஏடுகளும் கிடைத்திருந்தன. முருகப்பெருமானின் பரத்துவத்தைக் கூறும் கந்தபுராணத்தின் பின் எழுந்த பாரிய புராணம் தணிகைப் புராணம்.

திருத்தணிகையில் எழுந்தருளியுள்ள செருத்தணித் தெய்வப் பெருமானின் லீலாவிநோதங்களையும், திருவிளையாடல்களையும், அவர்தம் பரத்துவத்தையும் கூறும் தணிகைப் புராணத்தைச் செய்தவர் திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர் என்பவராவர். இவரைக் கவிராட்சதர் என்றும் வழங்குவர்.

திருவாவடுதுறை யாதீனத்துச் சிவஞான முனிவர் என்னும் பெரியவரின் சீடரான கச்சியப்ப முனிவர், வடமொழி தென்மொழிவல்லவர். மிடுக்கான கடின நடையிலே காவியரசனை ததும்ப இவர் இதனைச் செய்தமைக்குக் காரணம் இவர்தம் மாணாக்கர்கள் சிலர் காவிய ரசனைக்காகச் சீவகசிந்தாமணி என்னும் காப்பியத்தைப் போற்றி வந்தமையே என்பர் சிந்தாமணியிலும் பார்க்கத் தணிகைப் புராணம் காவியரசனைமிக்குள்ளது. இது 3161 பாடல்களைக் கொண்டது இதன் கடினமான போக்குக் காரணமாக இதனை இருப்புக்கடலை எனப் புலவர்கள் கூறுதல் வழக்கம்.

தணிகைப் புராணம் தமிழ் நாட்டில் இருப்புக் கடலையாயிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்துப் புலவர்கள் இவர் அதனை நெஞ்சில் ஊறவைத்து உரை சொல்வதிலும், ரசனை செய்வதிலும் சிறந்து விளங்கினார்கள்.

ஆறுமுகநாவலர்களின் மருகர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்கள் புராணேதிகாச ரசனையில் சிறந்தவர் பாற்கடலின் ஆழம்

### முத்திரையில் உலாவந்த வித்தகர்: 4

க. சி. குலரத்தினம்

1881ஆம் ஆண்டில் வெளியிட்டபின்; தாமியற்றிய கட்டளைக்கலித்துறை என்னும் நூலையும் வெளியிட்டார். உரையாசிரியர் பெருந்தேவனார், பாரதம் பாடியபெருந்தேவனாரின் வேறுவர்.

இவ்வாறாக 1881ஆம் ஆண்டின் இறுதிக்காலமும் 1882ஆம் ஆண்டின்முற்பகுதியும் பிள்ளைவர்களுக்குப் பெருஞ்சோதனைக்காலமாயிருந்தது பிள்ளைவர்களின் ஆசிரியர் கறோல் விசுவநாதர் அவர்கள் சென்னைப்பல்கலைக்கழகத்தில் சிறப்பான உத்தியோகம் செய்து வந்தவர். அவர் 1880ஆம் ஆண்டில் இறந்தமையும், பிள்ளைவர்களின் இரண்டாம் தாரத்து மனைவியும் மைந்தன் ஒருவனும் இறந்தமையும் பிள்ளைவர்களுக்குப் பெருந்துயரமாயிற்று

விசுவநாதனவர்கள்ஆறுமுகநாவலரவர்களுக்குச் சைவப் பணிசெய்யத்தோள் கொடுத்தவர். நாவலர் முன்னும் விசுவநாதர் பின்னுமிறந்ததை யிட்டுப் பிள்ளையவர்கள், ''ஆறுமுகநாவலரை அன்றழைத்தார் போதாதோ வீறு விசுவநாதனையும் இன்றழைத்தார் சைவந்தனையகத்தாரிக்கவோ இவர்கள் வைத்தவர்கள் எனக்கண்டு'' என்று உள்ளம் உருகினார்

இவ்வாறாக 1882ஆம் ஆண்டு பிள்ளையவர்களின் ஐம்பதாம் வயதாயிற்று. இவர் உத்தியோகத்தினின்றும் ஓய்வு பெற்று முழுநேரத் தமிழ்த்தொண்டு செய்வதற்கு விரும்பினார். எனவே தமக்கு வாழ்வதற்கு வசதியாகக் கும்பகோணம் என்னும் திருக்குடந்தை நகரில் வீடமைத்து அங்குச் சென்றுறைவாராயினர்.

முன்னர் வீரசோழியத்தின் ஏடுகள் தேடிய காலத்தில் அவ

கண்ட மற்றாரமலை என்று தமிழறிஞர் ஒருவர் அவரைப் போற்றியுள்ளார்.

பிள்ளையவர்களின் விசாரணத்தை நேரிற்கேட்டு ரசிப்பதற்காகத் தமிழ்நாட்டுப் புலவர்கள் கூட்டம் கூட்டமாக யாழ்ப்பாணம் வருதல் பெருவழக்காயிருந்தது திருவாவடுதுறையாதீன வித்துவானும் அண்ணாமலைப்பல்கலைக்கழகப் பேராசானுமாகிய பொன்னோதுவா மூர்த்திகளும் திருவாவடுதுறையாதீன மகாவித்துவான் மகாலிங்கம் பிள்ளையவர்களும், இன்னும் பலரும் இங்கே வந்து தணிகைப்புராணம் கேட்டுப் போனவைபவம் திருவாவடுதுறை வரலாற்றில் உள்ள செய்தியாகும்.

தாமோதரம்பிள்ளையவர்கள் தணிகைப் புராணத்தைப் பதிக்க முயற்சி செய்தபோது திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீன மகாசந்நிதானம் மேலகரம் சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமது ஆதீன நூலகத்து ஏட்டுப்பிரதியை மனமலர்ச்சியோடு கொடுத்துதவினார்கள். இந்தச் சுவாமிகளே முன்னர் ஆறுமுகநாவலரவர்களுக்கு நாவலர்பட்டம் கொடுப்பதற்கு முன்காரணராயிருந்தவர் பெரிய கலா ரசிகர் நாவலரவர்களோடு உரையாடுவதில் விருப்பம் மிக்கவர். தாமோதரம்பிள்ளையவர்கள் தணிகை புராணத்தை 1883ம் ஆண்டில் வெளியிட்டுப் புகழ் பெற்றார்கள். தணிகைப்புராணம் சம்பந்தமாகப் பிள்ளையவர்களுக்குப் பெருந்துணையாயிருந்தவர், இணுவில் அம்பிகைபாகர் என்னும் பெரும் புலவராவர். இவர் தணிகைப் புராணத்திற்கு உரையெழுதி

(5ம் பக்கம் பார்க்க)

# மாநகரின் மரணப் பொறிகள்

யாழ் மாநகரில் வீதி விபத்துகள் பெருகாதென்ற காரணத்தால் போலும் தொலைத்தொடர்பு திணைக்களம் உதவிக்கு வந்திருப்பதாக பலர் சொல்லக்கேட்டிருக்கின்றோம்.

ஆபத்துக்கள், விபத்துக்கள் எல்லாம் பட்டகாலிலே படும் என்பார்கள். கெட்ட குடியே கெடுமென்பது அதன்பிற்பகுதி.

இன்று யாழ் நகரில் எங்கு பார்த்தாலும் ரோட்டுகளின் அருகில் நெடுந்தூரத்துக்கு கிடங்குகள் வெட்டப்பட்டிருக்கின்றன. ஒரு [illegible]. ஊர்ந்துபோக அந்தக்காலத்தில் அமைந்த யாழ்நகர வீதிகள். இன்று எத்தெத்த நவநாகரிகம் படைத்த தேசங்களுக்குரிய கம்பீரமான மோட்டார் வாகனங்களை (பஸ) வாகனங்களை ஒருவாறு சமாளிக்கின்றன! அற்புதத்தின் அற்புதம்!

இவற்றுடன் தினசரி போட்டி போடும் ஆண், பெண் இருபாலாரின் சைக்கிள் வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் போவது பண்டிக்காட்டு முறையெனக் கைவிடப்பட்டது. ஒரே வழி என்ற (one way) பாதுகாப்பு முறையும் யாழ்நகர் பாதுகாப்பு அகற்றப்பட்டதுடன் போய்விட்டது.

இந்தப் பேரவலிக்குள் முளைத்ததே இப்புது அபாயம்.

தினந்தோறும் கிடைக்கும் தகவல்களைக் கேட்டாலும் புளித்துவிட்டது.

கிடங்குகள் - மரணப் பொறிகள்-கிடங்குகளாய்க் கிடக்கின்றன இவற்றை எச்சரிக்கும் சின்னம் எதுவும் கிடையாது. சின்னம்-விளக்கு வேலி முதலிய பொருட்களே பாதுகாப்பு பற்ற நிலையில் கைவிடப்பட்டிருக்கலாம்.

எவ்வாறாயினும் இந்த அபாயநிலை நீண்டகாலம் தொடர்வதற்கு எவ்வித நியாயமுமில்லை, தொடங்கிய வேலை துரிதமாக முடிவுறவேண்டும்.

பிரயாணிகள், பாதசாரிகள், பாடசாலை மாணவ மாணவிகள் இப்பொறிகளில் அகப்பட்டு பெரும் அபாயத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

மாநகரசபை இந்த நிலைமையை அகற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும், இன்று யாழ்நகர வீதிகளில் அசாதாரண நிலை ஏற்பட்டிருப்பதால் இது உடனடிக் கவனத்துக்குள்ளாக வேண்டும்.

## தணிகைப் புராணம்....

[4ம் பக்கத் தொடர்ச்சி]

யும் புகழ்பெற்றனர். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரவர்களும் தணிகைப்புராணத்துக்கு ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதிப்புகழ்பெற்றனர்.

தணிகைப்புராணத்தை மீளப்பதிப்பதற்கு முயற்சி செய்தவர், அறிஞர் கா. நமசிவாய முதலியார் என்பார். இவர் 1930-ம் ஆண்டில் தணிகைப்புராணத்தை சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்களின் ஆராய்ச்சிக் குறிப்போடு அச்சிட்டு வெளியிட்டார்.

தணிகைப்புராணத்தை முன்றுமுறையாய் முற்பட்டுப் பதிப்பித்தவர், திருவாடுதுறையாதீன மகாவித்துவானும் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் மட்டுவில் வேற்பிள்ளையவர்களிடம் படித்தவருமான வாசுதேவ தந்திரமணி ந. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர். இப்பதிப்பு திருவாடுதுறையாதீனச் சார்பில் பஞ்சாக்கர மூர்த்திகள் குருபூசை விழா மலராக 3-2-1960 ஆம் நாளில் மலர்ந்தது.

இம்மலரில் தாமோதரம்பிள்ளையவர்கள் தணிகைப்புராணம் அச்சிட்ட செய்தி முகவுரையிற் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளது. "இனி இத்தணிகைப் புராணத்தை முதல் முதலாக யாழ்ப்பாணத்து ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் 1883 ஆம் ஆண்டிலே அச்சிட்டார்கள்.

-தொடரும்

## இன்று தேர் உற்சவம்

[சுன்னாகம்]

ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 3ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்றுதேர்உற்சவமும் நாளை விசாழன் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. இரவு சமயப் பிரசங்கங்கள் நடைபெறுகின்றன.

## புதிய கட்டடம் அமைக்க முடிவு

[யாழ்ப்பாணம்]

நவாலி சென்பீற்றேஸ் றோ. க. த. க. பாடசாலையின் அபிவிருத்திச்சங்கப் பொதுக்கூட்டத்தில் வருவோர்புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

இக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு கே.பி. மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வண. பிதா பி.எம். இமானுவேல் கௌரவவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

புதியநிர்வாகசபைச்செயலாளராக ஏ சி.செபநாயகம், உப செயலாளராக சிறிக்குகநாதன், பொருளாளராக இ.கந்தையயா ஆகியோர் உட்பட 15 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

பாடசாலை இடவசதி போதாமை சபையில் சுட்டிக் காட்டப்பட்டு, விரைவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சபைமுடிவு செய்தது மற்றும் பலதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன,

## கூட்டணிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)


சாவகச்சேரி, திருகோணமலை நகரசபைத் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு பற்றுவதற்கு தகுதியில்லையெனத் தீர்ப்பளிக்கும்படி கோரி தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் அப்பீல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனு மீதான விசாரணை ஜூலை 18-ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

அப்பீல் நீதிமன்ற நீதிபதிகள் பி. ஈ டி. சில்வா, வி. எல். டி. மூனமலே ஆகியவர்கள் முன்னிலையில் நேற்று இவ் வழக்கு எடுக்கப்பட்டது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-01 | 3-2-1 கொன்ராக்ற் சிறுவர்நிகழ்ச்சி |
| 6-30 | கனிமன் தொடர்பான நிகழ்ச்சி |
| 6-45 | வைசாக் நிகழ்ச்சி |
| 7-00 | செய்திமஞ்சரி [தமிழ்] |
| 7-15 | ஆங்கில நிகழ்ச்சி |
| 7-45 | வைசாக் நிகழ்ச்சி |
| 8-15 | செய்திமஞ்சரி [சிங்களம்] |
| 8-45 | 'சுடரும் சூறாவளியும்' தமிழ்ப்படம் |
| 9-30 | செய்திமஞ்சரி [ஆங்கிலம்] |
| 9-45 | தமிழ்ப்பட ஒளிபரப்புத் தொடரும். |



## கணவனைப்பிரிந்து வாழ்ந்த இளம் பெண் தற்கொலை!

(கிளிநொச்சி)

ஒரு வருடமாக கணவனைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 24 வயதுள்ள இளம் பெண் ஒருவர் வாழ்க்கையில் மிகவும் விரக்தியடைந்து நஞ்சு அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

கிளிநொச்சி தொண்டமான் நகரில் வசிக்கும் மோகன் சத்தியபாமா என்ற இளம் பெண்ணே தற்கொலை செய்தவராவர்.

இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார்.

சாட்சியங்களை கிளிநொச்சிப் பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் இராமசாமி ஆஜர் செய்தார்.

ஜெ. சத்தியராணி, உதயமணி ஆகியோரும் சாட்சியமளித்ததைத்தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கினார். (க)

மாணவி கமலம் கொலை வழக்கு:

# "கழுத்தில் ஐந்து உரஞ்சல் காயங்கள் இருந்தன"

## சட்டவைத்திய அதிகாரி தொடர்ந்துசாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"கழுத்தில் 5 உரஞ்சல் காயங்கள் இருந்தன. கழுத்தின் இடதுபக்கத்தில் 2ம் வலது பக்கத்தில் 2ம் நடுப்பகுதியில் ஒன்றும் இருந்தன"

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கின் குறுக்குவிசாரணையின் போது சாட்சியமளித்த யாழ், பல்கலைக்கழக வைத்தியத் துறை பேராசிரியரும், பதில் சட்ட வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி என். சரவணபவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் குறுக்குவிசாரணைசெய்தார்.

இவ்வழக்கில் 1980 பெப்ரவரி 21ம, 22ம் திகதிகளுக்கிடையில் ரியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரனை பருத்தித்துறை ஆனைவிழுந்தான் மயானத்தில் வைத்துக் கொலை செய்ததாகவும் அவர் அணிந்திருந்த ஐயாயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியையும், ஜிப்சியையும் கொள்ளையடித்ததாகவும்பருத்தித்துறை சின்னத்தோட்டத்தைச் சேர்ந்த கந்தசாமி ராஜ்குமார் என்ற ராஜன்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணிகள் ரி. லிங்கராஜா, ஏ. தெய்வேந்திரன், எஸ். வெங்கடாசலம், ரி. தனராஜலிங்கம், திருமதி குலநாயகி ரத்னபாலா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

அரசதரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜெயக்குமார், சட்டத்தரணி குரூசேட் தம்பையாவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

சட்: காயத்தை ஏற்படுத்தியவர் 2 கைகளையும் பாவித்துக் காயங்களை ஏற்படுத்தியிருந்தால் நீங்கள் அவதானித்த காயங்களைத் தவிர கூடிய எண்ணிக்கையுள்ள காயங்களை எதிர்பார்த்திருக்க மாட்டீர்களா?–

ப: இது காயங்களை ஏற்படுத்தியவருடைய கைநகங்களுடைய கூர்மை, அவரது நகங்கள் வெட்டப்பட்டிருந்தனவா இல்லையா என்பதில் தங்கியிருக்கிறது, இந்த வழக்கு சம்பந்தப்பட்டவரையில் ஒரு கைதான் பாவிக்கப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன்.

சட்; கமலத்தைப் பொறுத்தளவில் அவரது போஷாக்கை அளவிடுசெய்யும் அடிப்படையில் அவர் ஓரளவு போஷாக்கான பிள்ளை அல்லவா?– ஆம்.

சட்: காலஞ் சென்றவருடைய உடல் பரிமாணத்தையும் அவருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் காயங்களையும் அவதானித்துப் பார்க்கும்போது அவருக்கு இரத்தக்காயங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களால் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்பதைஏற்றுக்கொள்வீர்களா?– ஆம்.

சட்: காலஞ்சென்றவர் மல்லுக்கட்டிய நேரம் நீண்ட நேரமாக இருக்குமானால் அவருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பல காயங்களும் ஒரே நபரால்ஏற்படுத்தப்பட்டிருக்க முடியுமா?– அவ்வாறு ஏற்பட்டிருக்கலாம் என்பதை நான் மறுக்கமாட்டேன்.

சட்: காலஞ்சென்றவர் தனது உயிருக்காகப் போராடியிருந்திருப்பாரானால் அவருக்கு காயத்தை ஏற்படுத்திய நபருக்கு அல்லது நபர்களுக்கு காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் அல்லவா?– ஏற்பட்டிருந்திருக்கலாம்.


விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (மா)

## ஊக்குவிப்பு நிதி

(கரவெட்டி)

கடந்த சித்திரை வருடப்பிறப்புத் தினத்தின் போது கூடிய விற்பனைவு நடைபெற்ற கிளை ஊழியர்களுக்கு கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊக்குவிப்பு நிதி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.


# பொன்ட்ஸ் ட்றீம்ஃப்ளவர் டால்க்




## இப்போது புதிய கலத்தில் கிடைக்கும்

அந்த விசேஷ ட்றீம்ஃப்ளவர் மலர் மணம் ஞாபகம் இருக்கிறதா?
இப்போது அதி கவர்ச்சியான ஒரு புதிய கொள்கலத்தில்
அது மீண்டும் கிடைக்கும். என்றும் போல் அதே மென்மை, அதே
இதம், அதே நுண்மை வாய்ந்தது. பொன்ட்ஸ் ட்றீம்ஃப்ளவர் டால்க்.
வாழ்க்கையின் சொகுசுகள் போன்ற தன் வாசனையை அது என்றும்
இழப்பதில்லை.

விலை 100 கி. ரு 13.50 ▪ 250 கி. ரு 23.00

**என்றும் நீங்கள் விரும்பி ஏற்ற மனம் கவர் நறுமணம்.**

POND'S

இன்ரநாஷனல் கொஸ்மெற்றிக்ஸ் லிமிட்டெட். பொன்ட்ஸ்—-மகாராஜா என்டர்பிரைஸஸ்.

HTL IC 1104

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு கூடுதலான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக மதிப்பீடொன்று நடத்தப்படவுள்ளது.

இளைஞர் விவகார, வேலைவாய்ப்பு அமைச்சின் திட்டமிடல் பிரிவு இம்மதிப்பீட்டை மேற்கொள்ளவுள்ளது.

(வெ)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
M.G.R.—சரோஜாதேவி
தாயைக்காத்த தனயன்
புதிய பிரதி

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30 630,
இரவு 9-30
கமலஹாசன் (இருவேடம்)
தங்கவேலு
கடல் மீன்கள்
(புதிய பிரதி—ஈஸ்மன் கலர்)

றீகல் (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — சுமித்திரா
சங்கிலி

# இன்றைய பலன்

வைகாசி 11-ம் திகதி
புதன்கிழமை
(25-5-83)

மேடம்: சுவையான சம்பவங்கள் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதையும் ஒழுங்கு முறையில் செய்வதால் திருப்தி அடைவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரும்.

இடபம்: பலன்தரும் திட்டங்களில் கவனம் செலுத்தவும். நீண்டநாள் மூடுமந்திரமாக இருந்த ஒரு உண்மை அம்பலத்துக்கு வரலாம். நிலைமையைச் சமாளித்துக்கொள்ளவும்.

மிதுனம்: நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். தொழில் வேட்டையில்வெற்றி கிடைக்கலாம். அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். வீட்டில் அமைதி உண்டு.

கடகம்: சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள். ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும் படித்தவர்களின் தொடர்பினால் பயனடைவீர்கள். எல்லாம் இன்பமயம்.

சிம்மம்: இலக்கியரசனையுடன் இசையிலும் பிரியம் கிடைக்கும் அறிஞர்களின் ஆதரவுண்டு. கலைஞர்கள் போற்றப்படுவார்கள். சிலருக்கு வெளியூர் சென்று வேலை செய்யும் வாய்ப்புண்டு.

கன்னி: பாதையில் பழுதுண்டு. பகைவர்கள் காத்திருப்பார்கள் செலவுகள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும். உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும். பண விவகாரத்தில் தொழில் துறையில் கவனம் வேண்டும்.

துலாம்: பிள்ளைகளின் தொல்லைகள் அதிகரிக்கும். பிறருடன் பகைத்துக்கொள்ள நேரிடும். குடும்பத்திலும் சிறிய புயல் வீசலாம். சிறிய விடயத்திற்குக்கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள்.

விருச்சிகம்: கன்னல்மொழி பேசிக்காரியத்தைச் சாதிப்பீர்கள். வெளியூர் நண்பர் ஒருவரின் வருகை குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் வரவேற்க வேண்டிய தினம்.

தனு: நினைத்தது நடக்காது. நிதியில் முடக்கமுண்டு. பூமிப்பிணக்கும் தலைகாட்டக் கூடும். அதிக சிந்தனை தலையிடியைக்கொடுக்கும். மனநிம்மதியைக்குறைக்கும் உறவினர் மத்தியில் பூசல்கள் உருவாகும்.

மகரம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிநிறைந்திருக்கும். புத்திரர் வழியால் புகழுண்டு. நீண்ட நாள் பாவனிக்கக் கூடியபொருள் கிடைக்கும். வாகனம் ஓட்டுவோர் நன்மதிப்படைவர்.

கும்பம்: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும். உங்கள் முன்னேற்றத்திற்கு அரசியல் வாதி ஆதரவுகொடுப்பார்.

மீனம்: அறவழியில் நாட்டம் செல்லும். வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும். இரக்க சிந்தனையின் மூலம் பொருட் செலவுண்டு. கிளரிக் கொடுபிடி வேலை ஆத்திரத்தைக் கொடுக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

வெஸ்லி (வாணிபப்பப்)
தினசரி— 4-15 7-00
சனி. ஞாயிறு 1-30
அரசிளங்குமரி

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
கமலஹாசன்
ரதி
உல்லாசப்பறவைகள்
27-5-83 முதல் சகலகலா வல்லவன்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
தர்ம யுத்தம்
27ம் முதல் அன்பே வா

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்
சம்பூர்ண
ராமாயணம்

# வல்வை புதிய மின் நிலையத்துக்கு ரூ. ஐந்தரை லட்சம்

(சாவெட்டி)

வல்வெட்டித்துறை நெடியகாட்டில் புதிய மின் நிலையம் ஒன்று நிறுவுவதற்கு வல்வை நகரசபைக்கு 5 லட்சத்து 51 ஆயிரம் ரூபாவை அரசு வழங்கியுள்ளது. இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# "சிறுபான்மையினர் பிரச்னை: நீதியான தீர்வு வேண்டும்"

## யாழ். மன்னார்குருமார்கள் கோரிக்கை

(கண்டிக்குளி)

"பயங்கரவாத தடைச் சட்டத்தை கண்டித்தும், சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்கு நீதியான முறையிலும், சமாதானமாகவும் தீர்வுகாண வேண்டும்" என யாழ். மன்னார் மேற்றிராசன குருமார்கள் இலங்கை கத்தோலிக்க மேற்றிராணிமார் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"கடந்த சில காலமாக தமிழ் இளைஞர்கள், கல்விமான்கள் வைத்தியர்கள், குருமார்கள் கைது செய்யப்பட்டு உள, உடல் வேதனைகள் அனுபவித்துள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம் மனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு மாறாக இருப்பதுடன் ஆயுதப் படையினருக்கு மிதமிஞ்சிய அதிகாரத்தைக் கொடுக்கிறது. உடல், உள சித்திரவதை மூலம் பெறப்பட்ட வாக்கு மூலம் ஒருவனை குற்றவாளியாக நிரூபிக்க ஆதாரமாக உள்ளது. இச்சட்டத்தைக் கண்டிக்காது மௌனம் சாதிப்பது அரசின் அநீதியான, மனிதாபிமானத்துக்கு ஒவ்வாத செயல்களுடன் தங்களையும் ஒன்றுபடுத்துவதாக கருத இடமளிக்கிறது. அனைத்துலக யூரர்சபை, உலக ஸ்தாபனங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தை மனித அடிப்படை உரிமைகளுக்கு எல்லாவகையிலும் நீதிக்கு முரணானதென கூறியுள்ளன. போதிக்கும் பணியைக் கொண்டுள்ள திருச்சபை நீதியைப் போதிப்பது மட்டுமல்ல எதிர்த்தும் வரும் அநீதியான செயல்கள், சட்டங்கள் முதலியவற்றை கண்டிக்க கடமைப்பட்டுள்ளது எனவே கத்தோலிக்க சமூக தலைவர்கள் என்ற முறையில் இச்சட்டத்தையும், ஆயுதப்படையினரின் மிதமிஞ்சிய அதிகாரத்தையும் வன்மையாக கண்டித்து சிறுபான்மையினரின் பிரச்சனைகளை சமாதானமுறையிலும், நீதியான முறையிலும் தீர்க்கும்படி அரசையும் ஏனைய தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறோம்."

# அலங்கார உற்சவம்

(காரைநகர்)

காரைநகர் மருதடி விரகத்தி விநாயகர் கோவில் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகியது. பத்துத்தினங்கள் பகல் அபிஷேக ஆராதனையும் சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். உற்சவத்தை சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள் நடாத்திவைப்பார்.

(அ)

# ஈழமக்கள் விடுதலைமுன்னணி உதவி

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை சந்தர்மடத்தில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களினால் வீடுகள், உடைமைகளை இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு ஈழமக்கள் விடுதலை முன்னணி சாவகச்சேரி, நுணாவில் பகுதிகளில் சுமார் 2500 கிடுகுகளைச் சேர்த்து வழங்கியுள்ளது.

இவர்களுக்கான நிதி உதவியொன்றையும் ஈழமக்கள் விடுதலை முன்னணி யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையிடம் கையளிக்கவுள்ளது.

# நியமனம்

(சங்கானை)

தென்னிந்திய கிறிஸ்தவ திருச்சபையின் நவாலி தேவாலயத்திற்கு திரு கிறிஸ்ரி ரி. ஜெபேக்ஸ் போதகராக நியமிக்கப்பட்டுள்ளார். தென்னிந்தியா பெங்களூர் கிறிஸ்தவ மதக்கல்லூரியில் சமயக்கல்வி பயின்று சித்தி பெற்ற திரு ஜெபேட்ஸ் பிராந்திய பிஷப் வண. அம்பலவாணரின் ஆசீர்வாதத்தைப் பெற்று கடந்த வாரம் தனது பொறுப்புக்களை நவாலி தேவாலயத்தில் ஏற்றார்.

# இடமாற்றம்

(சாவெட்டி)

யாழ். திருக்குடும்பகன்னியர் மகாணத் தலைமை இல்லத்தில் மடாதிபதியாகச் சேவைபுரிந்த அருட் சகோதரி சங்மேரி ஹில்டா முக்கோத்தீவு திருக்குடும்பக் கன்னியர் மட மடாதிபதியாக அடுத்த மாதம்முதல் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## தனிமனிதன்

(3ம் பக்கத்தொடர்ச்சி)

னார்.

குருநாகல் ரோட்டரிக்கழக உறுப்பினர் திரு. கே. இராஜகருணா பேசுகையில்; இருக்கைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் நல்ல, தீயகுணங்கள் என்பதில்லை என்றும் பின்னர் கல்வியினால்தான் நல்லியல்புகளையும் தீய இயல்புகளையும் அவர்கள் வளர்த்துக் கொள்கின்றனர்என்றும், மத, மொழி, இன வேறுபாடு சம்பந்தமான பாரபட்சம் சிறுவர் உள்ளங்களில் முளைவிடாவண்ணம் கல்வி அமையவேண்டும் என்றுகூறினார். டாக்டர் யேசுதாசனும் உரையாற்றினார்.

(அ)

## கந்தர்மடம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்நாவலடியிலும் தென்னங்கிடுகுகளைச்சேர்த்து யாழ். பல்கலைக்கழக மாணவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(வெ)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.00, 4.30, 7.00 9.30
Walt Disney's
HERBIE GOES BANANAS
(Family Entertainment)

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
A soldier of fortune and his trained assistants rescue a girl held captive in a Remote Island.
Action packed Karate Film.
FORCE FIVE
(Adults Only)
From the team that gave you "ENTER THE DRAGON" and "BATTLECREEK BRAWL"

சாந்தி - (யாழ். நகர்) 2-வது வாரம்
10-30, 2-30, 6-30, 9-45
தியாகம்
சிவாஜி, லக்ஷ்மி, மேஜர், தேங்காய், நாகேஷ்
மனோரமா
ஈஸ்ட்மென் கலர்
வி. கே. ராமசாமி

யாழ். மக்களுக்கோர்
அரிய சந்தர்ப்பம்!
நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?
இன்றே உங்கள் பிரயாண சீட்டுகளை யாழ். நகரிலேயே பதிவுசெய்ய நாடுங்கள்
'குறொஸ் ட்ரவல் சேவிஸ் (பிறைவேற்) லிமிட்டெட்' ஸ்தாபனத்தை.
(1) கொழும்பு வழியாக இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள், கனடா, ஜேர்மனி, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான பிரயாண சீட்டுகள்,
(2) பிரயாணிகள் காசோலை, VISA (விசா) (3) விசா, (VISA)
மற்றும் சகல பிரயாண ஒழுங்குகளுக்கும், பிரயாண அனுபவமிக்கவர்களின் இலவச ஆலோசனைகட்கும் உடன் தொடர்பு கொள்ளுங்கள் எங்கள் குளிரூட்டப்பட்ட அலுவலகத்தை. நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
CROSS TRAVEL SERVICE
(P.T.E.) LTD.
நவீன சந்தை, 2ம் கட்டிடம், 5, முதலாம்மாடி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 22040, 22065.
(7293)

### கந்தர்மடம் அகதிகள் உதவி

# யாழ். பல்கலைமாணவருக்கு

## பொதுமக்கள் தாராள ஒத்துழைப்பு

(யாழ்ப்பாணம்)

மனிதாபிமானமற்ற முறையில் சின்னாபின்னப்படுத்தப்பட்ட கந்தர்மடம் பகுதி மக்களின் உடைமைகளை நடுநிசி நேரத்தில் சூறையாடியும், தீக்கிரையாக்கியும் கோரத்தாண்டவமாடிய பகுதியில் பெரும்பாலும் யாழ். பல்கலைக்கழக மாணவர் இரண்டு நாட்களுள் புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக வீடுகள் அமைக்கத் தக்கதான பொருட்கள் கொடுத்ததுடன் மட்டுமல்லாது எதுவித ஆதரவற்ற குடும்பங்களுக்கு மாணவர்களே முன்னின்று வீடுகட்டும் பணியை நிறைவேற்றினர்.

மத, பிரதேச வேறுபாடு இன்றி யாழ். பல்கலைக்கழக மாணவரவையினர் மக்கள் கொடுத்துதவிய உதவிகளை வழங்கினர். மாணவர்கள் சகல பொருட்களையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒழுங்கான முறையில் விநியோகித்தனர்.

#### மக்கள் ஒத்துழைப்பு

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சாவகச்சேரி, முல்லைத்தீவு, கொடிகாமம், பளை, கோண்டாவில், சிறுப்பிட்டி, வட்டுக்கோட்டை, கோப்பாய் மற்றும் பல இடங்களுக்குச் சென்று கிடுகுகள், தடிகள் சேர்த்துக் கொள்வதற்கு அவ்வூர் மக்கள் தாராளமாக உதவியுள்ளனர்.

மயிலிட்டி இளைஞர்கள் பல்கலைக்கழக மாணவருடன் சேர்ந்து காலை முதல் மாலை வரை வீடு கட்டியதுடன் மட்டுமல்லாது தங்கள் பகுதிகளில் இருந்து தாராளமான பொருட்களையும் சேகரித்துக் கொண்டு வந்திருந்தனர்.

உணவுத்தானியங்கள், சமயலறைப்பாத்திரங்கள், உடுதுணிகள், பாய்கள், பாய்மா, போன்ற சகல பொருட்களும் நேற்று மாலை 4 மணியிலிருந்து இரவு 8 மணிவரை அரசடி வீதி ஞானசோதி சனசமூக நிலையத்தில் வைத்துச் சகல பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பல்கலைக்கழக மாணவர் விநியோகித்தனர்.

இன்னும் புத்தகங்கள், கொப்பிகள், மேசை கதிரைகள் மற்றும் வீட்டுக்குத் தேவையான சகல பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

#### உதவியவர்கள் விபரம்

கந்தர்மடத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் யாழ். பல்கலைக்கழகத்தினூடாக வழங்கப்பட்ட பொருட்களும், உதவிய நிறுவனங்களும்:-

வீடு கட்டுவதற்கான மரம், கிடுகு; யாழ். மாவட்ட மர ஆலைகள், பொதுமக்கள்

சமயலறைத் தளபாடங்கள் (ஒவ்வொரு குடும்பத்திற்கும் 18) யாழ். மாவட்ட அலுமினி தொழிற்சாலைகள்

14 நாள் தேவைக்குப்போதுமான அரிசி, தேங்காய், மரக்கறி:- பொதுமக்கள்

ஒரு மாதத்திற்குப் போதுமான பால்மா:- மதகுருமார்

சவர்க்காரம்:- வை ஐ, மிக்கவத்

மேலும் யாழ். லயன்ஸ் கழகம் லாம்புகளும், மேசைகளும் வழங்கியுளளது.

யூனிவேர்சல் அக்கடமி, சயன்ஸ் அக்கடமி, இளைஞர்கள், கரவெட்டி மக்கள் பாடசாலைப்புத்தகங்கள் வழங்கவுள்ளனர்.

யாழ் பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்களும், ஏனைய ஊழியர்களும் குறிப்பிடத்தக்க உதவியை வழங்குவதற்கான ஏற்பாடுகளைப் பல்கலைக்கழகத்தினூடாக செய்து வருகின்றனர்,

யாழ். பல்கலைக்கழக மாணவரவையின் கோரிக்கைக்கு 7000 ரூபா பெறுமதியான கிடுகு, தேங்காய் போன்ற பொருட்களை கந்தர்மடம் மக்களுக்காக சுபாஸ் நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

யாழ். லயன்ஸ் கழகத்தினர் 15,000 ரூபா பெறுமதியான விளக்கு மேசை கதிரை போன்ற பொருட்களை யாழ். பல்கலைக்கழக மாணவரவையினரிடம் கையளிக்கவுள்ளனர்.

வைத்தியர் பிலிப், பொறியியலாளர் தெய்வேந்திரராஜா சாவகச்சேரி இளைஞர்கள் வி. எம். எஸ். போனிரோர் வாதிகள் செய்து போக்குவரத்து உதவி செய்துள்ளனர்.

புரோமோட்டேர்ஸ் நிறுவனத்தினர் சுமார் 5000/-க்கு மேற்பட்ட தளபாடங்களை யாழ். பல்கலைக்கழக மாணவரவையிடம் கையளித்தனர்.

குரேஸ் ரவல் நிறுவனத்தினர் பணமாக 2,000 ரூபாவை மாணவரவையிடம் வழங்கி உள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, குமுழமுனை, முள்ளியவளை பாடசாலை மாணவர்கள் பெருமளவிலான காட்டுத்தடிகள் வெட்டி அனுப்பியுள்ளனர்.

மற்றும் தனிப்பட்டவர்களும், சனசமூக நிலையங்கள் இளைஞர் மன்றங்கள், மதநிறுவனங்களும் சேர்ந்து காலை 7 மணி தொடக்கம் மாலைவரை இணைந்து, பல்வேறு உதவிகளும் வழங்கியுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வகுப்புகளுக்குத் திரும்பினர். (மா)

## யாழ். றோட்டறிக் கழகமும் வீடுகள் கட்டிக் கொடுக்கும்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களுக்கு சீமெந்தினால் உறுதியாக்கப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுக்க யாழ். றோட்டறிக் கழகம் முடிவுசெய்து இதற்கானமுயற்சியில் இறங்கியுள்ளது.

யாழ் றோட்டறிக் கழகத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். சேனாதிராசா, செயலாளர் திரு. எஸ். செல்வராசா, ஆளுநர் பிரதிநிதி சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், முன்னாள் றோட்டறிக் கழகத் தலைவர்களான திருவாளர்கள்: ஆர். இராஜலிங்கம், ஆர் ஜே.குணரத்தினம் டாக்டர் லூர்து ஜெயசிங்கம், மற்றும் உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டபின்னர் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசடியிலுள்ள ஜனசக்தி சனசமூக நிலையத்தில் சேதப்படுத்தப்பட்ட தளபாடங்களுக்கும் பதிலாகப் புதிய தளபாடங்களை வழங்கவும், கிலவற்றைத் திருத்திக்கொடுக்கவும் யாழ் றோட்டறிக் கழகம் தீர்மானித்துள்ளது.

புனரமைப்பு வேலையில் மற்றும் றோட்டறிக்கழகங்களிடமிருந்து கிடைக்கும் நிதியைக் கொண்டு வீடு அமைக்கும் திட்டத்தை விஸ்தரிப்பதென்றும் யாழ். றோட்றிக் கழகம் முடிவு செய்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வன்செயல் நடந்த மறுநாளே யாழ். றோட்டறிக் கழகம் தண்பகல், இரவு உணவுகளை வழங்கியதுடன், கழக உறுப்பினர்களிடமும், வர்த்தகர்களிடமும் சேகரித்து சுமார் 5000 ரூபா பெறுமதியான அலுமினியப் பாத்திரங்களை யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியது. (மா)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் நாகம்மா

நல்லூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் நாகம்மா காலமாகிவிட்டார். இவர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், முனீஸ்வரன் வீதி தேநீர்க்கடை உரிமையாளரும், யாழ்ப்பாண அஞ்சலக அலுவலருமான நாகராசா, நகுலேஸ்வரி, அன்னலெட்சுமி ஆகியோரின் தாயாரும், நடராசா, பத்மநாதன், மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மாமியும், மகேஸ்வரியின் பெரிய தாயாரும், மகேசன் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (நோர்வே), சுபத்திராதேவி, வத்சலாதேவி, வாசுகி சூரியகுமார், விஜயகுமார், உதயகுமார், மகேந்திரராசா (பிரான்ஸ்) ஸ்ரீஸ்கந்தராசா, விக்கினராசா (பிரான்ஸ்), கதிர்ச்செல்வன், கிஞானசோதி, சசிகுமார், செந்தமிழ்செல்வி, திருநிறைச்செல்வி, அருந்தவச்செல்வன் (பிரான்ஸ்), பிரேமச்செல்வன், ஜெயச்செல்வன், செங்கதிர்செல்வி ஆகியோரின் பேத்தியும், துஷ்யந்தினி, விஜிதா சுஜிதா ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் இன்று (25-05-83) புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு அன்னாரது இல்லமான 103/1, கோயில் வீதி, நல்லூரில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். (7354)

### இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் சேமிப்பு பற்றிய கருத்தரங்கு இன்று காலை சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (மா)

### நிவாரண நிதியாக

# 63 குடும்பங்களுக்கு

## 25,000 ரூபா வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் நடந்த வன்முறைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 63 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக நேற்றுச் சமூக சேவைப் பகுதியினரால் 25,000 ரூபா நிவாரண நிதியாக வழங்கப்பட்டது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வைத்து இப்பணம் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட குடும்ப நிலைவரங்களுக்கேற்ப ஒரு பகுதியாக 200 ரூபா தொடக்கம் 450 ரூபா வரை இந்த நிதி வழங்கப்பட்டது என்றும் அடுத்து இரு வாரங்களுக்குள் மீதிப் பணம் வழங்கப்படும் என்றும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# மட்டக்களப்புப் பல்கலைக்கழக மாணவர்கள் உதவி

(மட்டக்களப்பு)

கந்தர்மடத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களால் அகதிகளாக்கப்பட்ட குடும்பங்களுக்கு மட்டக்களப்புப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று நிவாரண உதவிகள் வழங்கவுள்ளனர்.

நேற்றும் நேற்று முன்தினமும் மட்டக்களப்பிலுள்ள வர்த்தகர்கள், பிரமுகர்கள் ஆகியோரிடம் பல்கலைக்கழக மாணவர்கள் பொருள்களும் நிதியும் சேகரித்தனர் இன்று காலை மட்டக்களப்பிலிருந்து மாணவர்கள் புறப்படுகின்றனர். (மா)

### இன்று ஸ்ரீஸ்கந்தராசா மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தினத்தன்று இரவு யாழ்ப்பாணத்தில் பலியான காரைநகரைச் சேர்ந்த இரத்தினலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசாவின் மரண விசாரணை இன்று யாழ் பெரியாஸ்பத்திரி விசாரணை அறையில் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

பதில் நீதவான் கனகரத்தினம் கேசவன் மரணவிசாரணை நடாத்துவார்.

பலியானவரை பிரேத பரிசோதனை செய்த யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியரும் சட்ட வைத்திய அதிகாரியுமான எஸ். சரவணபவானந்தன் சாட்சியமளிப்பார்.

இன்று தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மா)

### இன்று உணவுப் பொருட்கள் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட 74 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேருக்கு இன்று இலவசமாக உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இந்த உணவுப் பொருள்கள் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் வைத்து வழங்கப்படும். (மா)

### பாதிக்கப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது. இந்த வைபவத்தின் போது யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரனும் சமூகமளித்திருந்தார். (மா)

### சிறைச்சாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடைபெற்றுள்ளது. ஏற்கனவே நீதிமன்ற உத்தரவு இராணுவத்தினரால் மீறப்பட்டுள்ளது. ஆதலால் சிறைச்சாலையிலிருந்து வேறு முகாமிற்கு இவர்களை மாற்றவேண்டாம்.

### பேராசிரியர் நேசையா

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கே. நேசையா ஆங்கிலத்தில் எழுதியுள்ள "இலங்கையில் கல்வியும் மனித உரிமைகளும்" என்ற நூல் வெளியீடு நாளை 26ம் திகதி றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் இதுபற்றிய செய்தியில் பேராசிரியரின் பெயர் நல்லையா என்று பிரசுரிக்கப்பட்டமைக்காக வருந்துகிறோம். ஆ—ர்

### ராஜாஜி, ஜெயப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் உட்பட 1974ம் ஆண்டு முதல் நடந்துள்ள வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புள்ளவர்களின் இருப்பிடம் தெரிந்திருந்தும் அதனைப் பொலிசாருக்கு அறிவிக்காமல் விட்டதாக இருவர்மீதும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான எஸ். சி. சந்திரகாசன், ஜி. குமாரலிங்கம், எஸ். பேரின்பநாயகம், எஸ். உருத்திரமூர்த்தி ஆகியோர் ஆஜரானார்கள்.

எங்கு காவலில் வைக்கப்பட்டாலும் மேற்கூறிய நான்கு சட்டத்தரணிகளும் எதிரிகளைப் பார்வையிட நீதிபதி அனுமதி வழங்கினார்.

சட்டத்தரணி எஸ். சி. சந்திரகாசன், இச்சம்பவங்கள் யாழ்ப்பாண நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குள் நடந்துள்ளதால் இதனை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இல்லையென்று பூர்வாங்க ஆட்சேபமொன்றைத் தெரிவித்தார்.

குற்றச்சாட்டு தாக்கல்செய்யப்பட்டதைத் தொடர்ந்து எதிரிகள், பனாகொடை முகாமிலிருந்து 'மகசின்' சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி ஆட்சேப மொன்றையும் சட்டத்தரணி எஸ் சி. சந்திரகாசன் தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் சட்ட உத்தரவின்மூலம் எதிரிகளை மீண்டும் பனாகொடை இராணுவ முகாமுக்கு மாற்ற முடியுமென்றும் அப்படி மாற்றக்கூடாதென்றும் அவர் தெரிவித்தார்.

எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்ட இரு ஆட்சேபங்களுக்கும் ஜூன் 1ம் திகதி தீர்ப்பளிக்கப்படுமென்று நீதிபதி தெரிவித்தார். (இ-க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber QD 100236/81. Eelanadu-P O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.